**2020 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் அவசர கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :**
**திரு. சி. பாண்டு,**
**நகராட்சி பொறியாளர் மற்றும்**
**தனி அதிகாரி(பொ),**
**விருத்தாசலம் நகராட்சி.**

பொருள் எண். 1.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–2021ன் கீழ் ரூ. 5.00 கோடி மதிப்பீட்டில் சாலைப்பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க. எண். 20557/2020/இ3, நாள். 11.12.2020 ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பட்டுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட மான்ய நிதி 2020–2021 (ரூ. கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| விருத்தாசலம் | 5.00 | 4.50 | 0.50 |

எனவே, மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்காணும் பணியை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றி நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண். 7 கண்மணி நகர், வார்டு எண். 16 திலகர் வீதி மற்றும் தெற்கு பெரியார் நகர் தெருக்கள் மற்றும் வார்டு எண். 17 பூதாமூர் பழைய காலணி, வார்டு எண். 31. தில்லை நகர் மெயின்ரோடு மற்றும் வார்டு எண். 32. சாவடிக்குப்பம் மெயின் ரோடு தார்சாலை அமைக்கும் பணி. | 4.200 | 4.00 | 175.00 |
| 2. | வார்டு எண். 6 சரோஜினி நகர், வார்டு எண். 7 அந்தோணியார் நகர், வார்டு எண். 10 கிருஷ்ணா நகர், வார்டு எண். 12, வடக்கு வீரபாண்டியன் தெரு, வார்டு எண். 13 திருவள்ளுவர் நகர் மற்றும் வார்டு எண் 16 பாரதியார் தெரு மற்றும் அமுதம் தெரு தார்சாலை அமைக்கும் பணி. | 3.950 | 4.00 | 150.00 |
| 3. | வார்டு எண். 16 ஆப்பிள் தெரு, கங்கை வீதி, யமுனை வீதி, காவேரி தெரு, வார்டு எண். 24. தங்கமணி கார்டன், வார்டு எண். 26, பழமலைநாதர் நகர் 6வது தெரு, வார்டு எண். 27 முனியப்பர் கோயில் தெரு மற்றும் வார்டு எண். 28 ராமன் நாயர் நகர், தமிழ்நகர் , மணலூர் மற்றும் வார்டு எண். 31. அரசு மருத்துவமனை முதல் மேட்டுக் காலனி வரை தார்சாலை அமைக்கும் பணி. | 4.600 | 4.00 | 175.00 |
| | மொத்தம் | 12.750 | 4.00 | 500.00 |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 4981/2020/இ1

<u>பொருள் எண். 2.</u>

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் பயன்பாட்டில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள் பொது கழிப்பிடங்கள், நகராட்சியின் தொடக்கப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப்பள்ளிகளின் கழிவறைகளை பராமரிக்க விலைப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த சுபம் கங்கா சேவா கன்ஸ்தான், நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டுள்ளது. தற்சமயம் அந்நிறுவனத்திற்கு பணிகாலம் 30.11.2020 வரை முடிவடைவதால் பணிக்காலம் நீடிப்பு செய்ய வேண்டி மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து கடிதம் வரப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து அந்நிறுவனம் அளித்துள்ள அதே விலைப்புள்ளி விகிதத்தில் நிர்ணயம் செய்த தொகையில் அனைத்து நிபந்தனைகளுக்குட்பட்டு 01.12.2020 முதல் ஒரு வருட காலத்திற்கு பணிக்காலம் நீடிப்பு செய்து உத்தரவு வழங்கிடவும் அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு பணியின் அவசரம் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4263/2019/இ1)